மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மதிய உணவுக்காகப் பொதுமக்கள், ஊராட்சி மன்றங்கள் கொடுப்பது குறைவாக இருக்கிறது. அதோடு "கேர்" நிறுவனத்தின் சார்பில் ஒவ்வொரு பள்ளியிலும் ஒரு மத்திய சமையல் அறை கட்டப்பட வேண்டும் என்று திட்டம் இருக்கிறது. இப்பொழுது செங்கற்பட்டில் அது நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டு 30 ஊராட்சி ஒன்றியங்களில் இப்படி மத்திய சமையல் அறை கட்டத் திட்டமிட்டிருக்கிறது. இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளில் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் இந்த சமையல் அறை வந்துவிட்டால், இந்தக் குறைபாடு பெரும் அளவிற்குக் குறைந்துவிடும். ஆறு பைசா என்று கொடுக்கும்போதே சர்க்கார் இரண்டு கோடி ரூபாய்க்கு மேல் மதிய உணவிற்காகச் செலவழிக்கிறார்கள்.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : சபாநாயகர் அவர்களே, மாணவர்களுக்கு மதிய உணவு அளிக்க "கேர்" ஸ்தாபனமும், சர்க்காரும் உதவி அளிக்கிறார்கள். ஆனாலும் இந்த வேலையில் ஆசிரியர்கள் பயன்படுத்தப்பட்டு, தங்கள் ஆசிரியக் கடமைகளைச் சரிவரச் செய்ய முடியாத நிலை இருக்கிறது. ஆகவே, ஆசிரியர்கள் பொறுப்பு இல்லாமல் இந்த மதிய உணவுத் திட்டத்தை அமுல் படுத்த சர்க்கார் முயற்சிப்பார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் அத்தகைய குறைகள் பெரும் அளவிற்குக் குறைக்கப்பட்டிருக்கின்றன. ஆசிரியர்கள் தங்கள் ஓய்வு நேரங்களில், இந்தத் திட்டத்திற்குத் தூண்டுகோலாக இருந்து சமூகப் பணி என்ற வகையில் பணிபுரிகிறார்கள். முன்பு குறிப்பிட்டது போல, மத்திய சமையல் அறை வந்துவிட்டால், இவர்களுக்கு மேற்பார்வை பார்க்கும் பொறுப்புத்தான் இருக்கும். அவர்கள் இதைப் பொதுத் தொண்டில் ஒன்றாகச் செய்வது பாராட்டப் பெறும், போற்றப் பெறும். எங்கும் வற்புறுத்தும் நிலை இல்லை.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, "கேர்" நிறுவனம் தவிர, வெளிநாடுகளிலிருந்து வேறு பல நிறுவனங்களிலிருந்து, அரசுக்கு நேரிடைத் தொடர்பு இல்லாமல், பல்வேறு வகையில் உதவி பெறுவதைத் தடுத்து, எல்லாம் அரசாங்கத்தின் மூலமாகத்தான் பெற வேண்டும் என்று ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவது போல, புகார் இருப்பதாகத் தெரியவில்லை. கூடுமான வரையில் கல்வித் துறையின் மூலமாகத்தான் எல்லாம் செயல்படுத்தப்படுகின்றன. ஏதாவது ஊழல்கள் இருந்தால், அதைச் சுட்டிக் காட்டினால், அவற்றை அகற்றி எல்லாவற்றையும் கல்வித் துறைமூலம் செயல்படுத்த, ஏற்பாடுகள் செய்யப்படும்.

பரமக்குடிக்கு வட்டமைய மருத்துவ மனை.

*114 **வினா.—திரு. வீ. மலைக்கண்ணன் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள பரமக்குடியில் வட்ட மைய மருத்துவமனை (Taluk Headquatrers Hospital) அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும் ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) அண்ட் (இ) : சுமார் ரூ. 9·62 லட்சம் செலவில் 38 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை பரமக்குடியில் கட்ட செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையிலுள்ளது.

1970 பிப்ரவரி 26]

திரு. வி. மலைக்கண்ணன் : அவைத் தலைவர் அவர்களே, பரமக்குடி பகுதி வரட்சியான பகுதி. ஆகவே, மக்கள் செலுத்த வேண்டிய பங்குத் தொகையை அவர்களால் செலுத்த முடியவில்லை. ஆகவே, அதையும் அரசாங்கமே கொடுத்து, மருத்துவ மனையைக் கட்ட அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, பொதுமக்களிடத்தில் ரூ. 4 லட்சம், ரூ. 9 லட்சத்தில் சுமார் பாதித் தொகை, வசூல் செய்யவேண்டும் என்று, மாவட்ட ஆட்சித் தலைவரைக் கொண்ட குழு அமைக்கப்பட்டிருக்கிறது. நன்கொடை முயற்சி செய்யப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைமையாகக் கொண்டு, அந்த அடிப்படையில் முயற்சி செய்யப்படுகிறது. அதில் உறுப்பினர் போன்றவர்கள் முயன்றால் முடியாதது ஒன்றும் இல்லை. இதைவிட சிறிய ஊர்களில் கூட, மக்கள் நன்கொடைகள் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் முயன்று செயல்பட்டால், நான்கு லட்சம் ரூபாய் திரட்டுவது கடினம் இல்லை. ஆகவே, இதில் அவர்களும் ஈடுபட வேண்டும். அரசாங்கமும் தன் பங்கைச் செய்யும் என்று கூற விரும்புகிறேன்.

வேலூரிலுள்ள மீனளத்துறை.

* 115 **வினா.—திரு. மா. பா. சாரதி :** மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடார்க்காடு மாவட்டம் வேலூரிலுள்ள " மீன் இலாகாவுக்கு" ஆண்டொன்றுக்கு ஆகும் செலவு என்ன ?

(இ) மீன் விற்பனை மூலம் ஆண்டொன்றுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) 1968–69-ம் ஆண்டுக்கான மொத்தச் செலவு ரூ. 14,509·72.

(இ) 1968–69-ம் ஆண்டில் கிட்டிய மொத்த வருவாய் ரூபாய் 17,544·62.

திரு. மா. பா. சாரதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இலாகாவை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற அளவில் செயல்படும்போது, நஷ்டத்தில் போகிறதே. அதைத் தடுத்து, லாபகரமாகச் செய்ய, திட்டத்தை விரிவுபடுத்த முயற்சி செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, நான் கூறியிருப்பது நஷ்டம் இல்லை. பதினேழாயிரம் சொச்சம் வரவு என்றும், பதினாலாயிரம் சொச்சம் செலவு என்றும் சொன்னேன். மூவாயிரம் லாபத்தில் இருக்கிறது. நஷ்டம் இல்லை.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, மீன் இலாக்கா மூலமாக பஞ்சாயத்து யூனியன்களுக்கு விரால் போன்ற மீன் குஞ்சுகள் சரியான முறையில் வழங்கப்படுவதில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கக்கூடிய ஈ.ஓ.ஏ.எச்-சுக்கும் கால்நடை விஸ்தரிப்பு அதிகாரிகளுக்கும் சரியான தொடர்பு இல்லாததனாலே சரியான முறையில் பஞ்சாயத்து யூனியன்களிலே மீன் வளர்ப்பதற்கு இடையூறாக இருக்கிறது என்பது தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அது பற்றி விவரம் இல்லை. மீன் வளர்ப்பில் ஆண்டு ஒன்றுக்கு ஆகின்ற செலவைவிட அதிகமான வருமானம் வரக்கூடிய அளவுக்கு எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.